நாள் 24-10-11-ல் ரூ.23.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி அனைத்து உபகரணங்களையும் அரசுத் துறை நிறுவனமான எல்காட் நிறுவனத்தின்மூலம் வாங்குவதற்கு, அந்நிறுவனத்திற்கு 1-2-2012 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

16—

பணியின் நிலை

வினா எண் 11424—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் இந்திய அரசிதழ் மற்றும் புனித ஜார்ஜ்கோட்டை அரசிதழ்கள் ஆகியவற்றை டிஜிட்டல் ஸ்கேனிங் மற்றும் நுண்படச் சுருள்கள் மேற்கொள்ளும் பணியின் நிலை குறித்துத் தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் உயர் கல்வித் துறை அமைச்சர்:

புனித ஜார்ஜ் கோட்டை மற்றும் இந்திய அரசின் அரசிதழ்களை டிஜிட்டல் ஸ்கேனிங் மற்றும் மைக்ரோ பிலிமிங் செய்திட, 2011-2012 ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டத்தின்கீழ் அரசாணை (நிலை) எண் 228, உயர் கல்வி, நாள் 24-10-11ல் ரூ.10 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளை மேற்கொள்ள எல்காட் நிறுவனத்திற்கு பணி ஆணை 6-2-2012ல் வழங்கப்பட்டுள்ளது.

17—

மின்னணு பத்திரப் பதிவு

வினா எண் 3759—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்திலுள்ள அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் மின்னணு பத்திரப் பதிவு முறையை அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 மே 11]

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) தற்போது பதிவுத் துறையில் மொத்தமுள்ள 578 சார்பதிவாளர் அலுவலகங்களும், 50 மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களும் கணினிமயமாக்கப்பட்டு, பத்திரப் பதிவு கணினி மூலம் அனைத்து சார்பதிவகங்களிலும் செய்யப்பட்டு வருகிறது. இச்சேவையை மேலும் மேம்படுத்த, அனைத்து சார்பதிவகங்களையும் தமிழ்நாடு மாநில பெருவலைப்பின்னல் (Tamil Nadu State Wide Area Network) *மூலம் இணைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இணையதள அடிப்படையிலான மென்பொருள் தயாரிக்கும் பணிக்கு ஆலோசகர் நியமிக்கப்பட்டு, அதற்கான கட்டணமாக ரூ.30 இலட்சம், அரசாணை (நிலை) எண் 159, நாள் 28-12-2011-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தற்போது, இதற்காக நியமிக்கப்பட்ட ஆலோசகரால், வரைவு திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. வரைவு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டவுடன், இணையதள அடிப்படையிலான மென்பொருள் தயாரிக்க ஆகும் செலவுத் தொகைக்கு அரசால் நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டபின், ஒப்பந்தப்புள்ளிமூலம் மென்பொருள் தயாரிக்கும் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்படும். அதன் பின்னர் இணையதள அடிப்படையிலான மென்பொருள் தயாரிக்கப்படும்.*

(ஆ) அனைத்து அலுவலகங்களும் TNSWAN *இணைப்பு மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு, இணையதள அடிப்படையிலான மென்பொருள் தயாரிக்கப்பட்ட பின்னர், தமிழகத்திலுள்ள அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் மின்னணு பத்திரப் பதிவு முறை அமல்படுத்திட வழிவகை ஏற்படுத்தப்படும்.*

18—

பணி நியமனம்

வினா எண் 4715—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*